Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம்10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் 7 (13-9-65) இதழ் 213

விசுவாவசு ஆவணி 28 ஜ: அவ் பிறை 16 திங்கட்கிழமை




## பாகிஸ்தானுக்கு துருக்கி உதவி

### ரூ. 5 லட்சம் பெறுமான ஆயுதங்கள் அனுப்பும்

அங்காரா. செப்.12

பாகிஸ்தான் விடுத்துள்ள கோரிக்கையை துருக்கி ஏற்றுள்ளதென்றும் பாகிஸ்தானுக்கு ஐந்துலட்சம்ரூபா பெறுமதியான ஆயுதங்களையும் வெடி மருந்துகளையும் துருக்கி அனுப்புமென்றும் துருக்கி பிரதமர் அறிவித்துள்ளார்.

# லாகூரில் இந்தியபடை முன்னேற்றம்

## சியால் கோட்டில் கடும்சண்டை

### பாக். விமானத்திடல்கள் மீது இந்திய விமானங்களின் புதிய தாக்குதல் ஆரம்பித்தன

புதுடில்லி, செப். 12

கடுமையான சண்டை நடைபெற்றுவரும் லாகூர் பகுதியில், இந்தியப் படைகள் பாகிஸதான் தாக்குதல்களை வெற்றிகரமாகச் சமாளித்து, வாஹாவிலிருந்து கஸூர் வரை முன்னேறிக்கொண்டு செல்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இன்று நிகழ்ந்த சண்டையில் 40 பாகிஸதான் டாங்கிகள் அருக்கப்பட்டன. 15 டாங்கிகளை இந்திய படைகள் பிடித்தன.

இதற்கிடையே இந்திய விமானப் படைவிமானங்கள் இன்று பாகிஸ்தானின் விமானத்திடல்கள்மீது புதிதாகத் தாக்குதல்கள் நடத்த ஆரம்தத்திருக்கின்றன என்று கடைசிச் செய்திகள் கூறுகின்றன.

லாகூரில் கடுமையான சண்டை நடைபெற்று வருகிறது. இருநாட்டுப் படைகளும் தீவிரமாகத் தாக்குதல்கள் நடத்தி வருகின்றன. பல பகுதிகளில் பாசிஸ்தான் படைகள் விரட்டியடிக்கப் பட்டிருக்கின்றன. இருதரப்பிலும் ஏராளமான உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கிறதென்றும் பாகிஸ்தான் துருப்புக்களே அதிக எண்ணிக்கையில் உயிரிழந்தனர் என்றும்இந்தியச்செய்திகள் கூறுகின்றன.

## டாங்கிகளுடன் பாகிஸ்தான் துருப்புகள் சரணடைந்தனர்

லண்டன், செப். 12

லாகூரின் பல பகுதிகளிலும் நடைபெற்று வரும் சண்டையில் இன்று இந்தியப்படைகள் விமானங்களின் உதவியுடன் ஏராளமான பாகிஸ்தான் டாங்கிகளை அழித்து கவசவண்டிகளையும் நாசமாக்கின. பாகிஸ்தானியரின் நாற்பது டாங்கிகளை இந்திய படைகள் இன்று அழித்தன. 15 டாங்கிகளைப் பிடித்தன. இரண்டு பாகிஸ்தான் டாங்கிகளுடன் பலர் கூந்தியப் படைகளிடம் சரணடைந்ததாக இந்தியச் செய்திகள் கூறுகின்றன. இன்று நடைபெற்ற சண்டையில் பாகிஸ்தான் துருப்புக்களுக்கே அதிக உயிர்ச்சேதம் என்றும் இச்செய்திகள் தெரிவிக்கின்றன.

## பாக். விமானங்கள் புதிய தாக்குதல்கள்

ராவல்பிண்டி, செப். 12

பாகிஸ்தான் விமானங்கள் இன்று ஆதம்பூர், பட்டான்கோட், ஹல்வாரா பகுதிகளில் குண்டுகளைவீசி தாக்குதல்கள் நடத்தின. இத்தாக்குதல்களில் அதிகசேதம் ஏற்படவில்லை என்று இந்தியா அறிவிக்கிறது,

பாகிஸ்தான் விமானங்கள் இன்று காஷ்மீர் பள்ளத்தாக்கிலும் இந்தியா வசமுள்ள பல ராணுவ இலக்குகள் மீதும் குண்டுகளை வீசி புதிய தாக்குதல்களை நடத்தின என்றும் ராவல்பிண்டி செய்திகள் கூறுகின்றன.

லாகூரில் இந்திய படைகளுக்கும் பாகிஸ்தான் படைகளுக்குமிடையே கடுமையான சண்டை நடைபெறுகிறதென்றும் பாக். படைகள் தீவிரமாக யுத்தம் புரிந்து இந்தியப்படைகளை பின்வாங்கச் செய்வதாகவும் செய்திகள்தெரிவிக்கின்றன.

## இந்திய தலைவர்களுடன் யுதாண்ட் பேச்சு ஆரம்பம்

புதுடில்லி, செப். 12

இன்று காலை புதுடில்லி வந்து சேர்ந்த ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் இங்கு வந்த சில மணிநேரத்துக்குள் இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணனைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தினர்

இன்றுகாலை அவர் இந்திய வெளி விவகார மந்திரி சர்தார் சுவர்ண்சிங்கையும் சந்தித்தார். பகலில் டாக்டர் ராதாகிருஷ்ணனுடன் விருந்துண்டார்.

மாலையில் பிரதமர் சாஸ்திரியைச் சந்தித்து ஆரம்ப பேச்சுக்கள் நடத்தினர். இரவு விருந்தை யுதாண்ட் சாஸ்திரியுடன் கழித்தார். யுதாண்ட் இந்திய ஜனாதிபதியுடன் தங்கியிருக்கிறார்.

## கல்மடு விஸ்தரிக்கப்படும்

### கூட்டுப்பண்ணை முறை பற்றி கிளிநொச்சி எம். பி.

மீசாலை, ஞாயிறு

''நெற்காணிகளுக்கான முடிக்குரிய நிலங்களில் கூட்டுப்பண்ணைகள் நடத்தப்பட்டபோதிலும் அவற்றைத் தனிப்பட்டவர்களுக்கு புறம்மாகப் பிரித்துக்கொடுத்துக் கமச் செய்கைக்குமாத்திரம் கூட்டமாக இயங்க அனுமதிக்கவேண்டும். இந்த முறையால் தனிப்பட்டவர்களின் கமச்செய்கையை அபிவிரித்தி செய்ய முடியும், சாளம்பனில் மத்திய வகும்பாருக்கு கூட்டுறவு முறையில் ஒருமிக்க வழங்கப்பட்ட 250 ஏக்கரையும் தலைக்கு ஐந்து ஏக்கராக 50 உறுப்பினர்களுக்கும் பிரித்துக் கொடுத்து அப் பண்ணையை வளம் படுத்த வழிசெய்வேன்''

இவ்வாறு சாளம்பன்கமக்காரர் சார்பாக திரு. ஆர். ரி. சுப்பிரமணியம், சமாதான நீதிபதி, திரு. எஸ். சுப்பிரமணியம், திரு. க, தம்பிப்பிள்ளை, திரு. ச. சுப்பையா ஆகியோர் கிளிநொச்சிப் பிரதிநிதி திரு. கா, பொ, இரத்தினத்தை பேட்டி கண்டபோது பண்டிதர் கா. பொ. இரத்தினம் கூறினார்.

காணிவரிகளைக் குறைக்கவும், நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் உறுதி கூறினர். கல்மடுத்திட்டத்திற்கு ஒரு லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அக் குளமும் இரணைமடு போல நாட்டை வளமாக்கும் என்றும் கூறினர்.

## பாக். நிர்வாகம் சீர்குலைவு?

புதுடில்லி, செப்.12

இந்திய படைகளின் தீவிர முன்னேற்றத்தையும் எதிர்த்தாக்குதலையும் தொடர்ந்து பாகிஸ்தானின் இராணுவம் சீர்குலைந்துள்ளதாக வெளிநாட்டு நிருபர்களின் செய்திகளை ஆதாரமாகக் கொண்டு புதுடில்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கராச்சி வழியாக இந்தியா வந்து சேர்ந்த ஒரு ஐரோப்பிய மாது பாகிஸ்தானின் நிர்வாகம்சீர்குலைந்துள்ளதாகவும் பாகிஸ்தானில் அவல நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார். பாகிஸ்தானிலுள்ள சுமார் 5000 வெளிநாட்டவர்கள் கராச்சி விமான நிலையத்தில் போக வழியின்றித் திரண்டிருப்பதாகவும் அந்தப்பெண் தெரிவித்துள்ளார்.

## வெளிநாடுகளுக்கு பாக். அவசர கோரிக்கை

கராச்சி, செப். 12

இந்தியாவுடன் நடைபெற்றுவரும் சண்டையில் பாகிஸ்தானுக்கு உதவிகள் அளிக்குமாறு கோரி, ஐ. நா.வில் அங்கம் வகிக்கும் நாடுகளுக்கும் அங்கம் வகிக்காத நாடுகளுக்கும் பாகிஸ்தான் அவசர வேண்டுகோளை விடுத்திருக்கிறது.

இக்கோரிக்கைகளுக்கு சீன, இந்தோனேஷியா, துருக்கி, ஈரான், ஸிரியா ஆசிய நாடுகள் இணக்கம் தெரிவித்திருப்பதாகபாகிஸ்தான் வானொலி அறிவித்திருக்கிறது. ஸிரியா துருப்புகளை அனுப்புமென்று உறுதி கூறியுள்ளதாம்.

இதற்கிடையே லண்டனிலுள்ள பாகிஸ்தான் ஹைகமிஷனர் ஹிலாலி, இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும், பிரிட்டனும் அமெரிக்காவும் விதித்த இராணுவ ஆயுதத் தடைகள் இந்தியாவுக்கு அனுகூலத்தை ஏற்படுத்தியுள்ளதென்றும் பாகிஸ்தானை முடக்கிவிட்டதென்றும் தெரிவித்துள்ளார்.

## காஷ்மீரில் தீவிர தாக்குதல்: 50 பேர் பலி

ஸ்ரீநகர், செப். 12

காஷ்மீர் பள்ளத்தாக்கில் பாகிஸ்தான் ஊடுருவல்காரர்கள் மீது இந்திய துருப்புகள் இன்று கடுமையாகத் தாக்குதல்கள் நடத்தி ஒரு பகுதியில் மட்டும் 50 பேரை கொன்றுவிட்டனர் என்று ஸ்ரீநகர் வானொலி அறிவித்துள்ளது.

பெரிய கோஷ்டிகளாக இருந்த பாகிஸ்தான் ஊடுருவல்காரர்கள் இப்பொழுது சிறு சிறு கும்பல்களாகப் பிரிந்து ஓடுகின்றனர் என்றும் இவர்கள் இலேசாகக் கைதுசெய்யப்படுகிறார்கள் என்றும் ஸ்ரீநகர் வானொலி அறிவித்தது.

## அரிசியில் மோசடி!

### எச்சரிக்கையாக இருக்கும்படி பொதுமக்களுக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்திலுள்ள சில வர்த்தகர்கள் பச்சை அரிசியுடன் ரேஸ் பவுடரைக்கலந்து உள்ளூர் பச்சை அரிசி என்று கூறி விற்பனவு செய்து வருவதாகவும், இந்த மோசடிக்குப் பலியாகாமல் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று யாழ்ப்பாணம் உதவி உணவுக் கட்டுப்பாட்டுஅதிகாரி திரு. கே. சிவப்பிரகாசம் பொதுமக்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

''சகல மனிதரும் சகோதரர். மனிதவர்க்கம் ஓருயிர். இப்படியிருக்க நான் ஒரு வீட்டுக்குள்ளே ஆசாரச் சுவர்கட்டி நான் வேறுசாதி, அவன் வேறுசாதி, அவனைச் சாதிப்பிரஷ்டம் செய்ய வேண்டுமென்பது சுத்த மடமை.''

— பாரதியார்


# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஆவணிமீ 28 உ (13-9-65)


## யுத்தம் தரும் படிப்பினை

இன, மத துவேஷங்களால் எவ்வளவு பெரிய ஆபத்து நேருமென்பதையும் அதன் விளைவுகள் எப்படியிருக்குமென்பதையும் இந்திய பாகிஸ்தான் யுத்தம் எடுத்துக் காட்டுகிறதென்றும் இது இலங்கைக்கு ஒரு படிப்பினையாக இருக்க வேண்டுமென்றும் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா மகியங்கனையில் புனித நகர் அங்குரார்ப்பண வைபவத்தில் பேசுகையில் சரியாக எச்சரித்தார்.

இந்திய மக்களும் பாகிஸ்தான் மக்களும் ஒருகாலத்தில் ஒரு தாய் மக்களாக, சகோதரர்களாக வாழ்ந்து வந்தார்கள். இன, மதக் கூச்சல் கிளம்பி பிரிவினையில் முடிந்தது. இந்திய உபகண்டம் இரு தனி நாடுகளாகப் பிரிந்தபோதிலும், நூற்றுண்டுகளாக அந்நியரின் அடிமைத் தளையில் சிக்கி அல்லலுற்ற இந்த உபகண்ட மக்கள் தங்கள் நாடுகளின் முன்னேற்றத்துக்காகவும் மக்கள் மத்தியில் நிலவும் வறுமை, நோய் ஆகியவைகளை நீக்கவும் தங்கள் முழுச்சக்தியையும் உபயோகிப்பதற்குப் பதிலாக இப்பொழுது ஒருவருடன் ஒருவர் சண்டையிட்டு அழிந்து கொண்டிருக்கின்றனர். இந்த நிலைமையையிட்டு யாரும் சந்தேஷேப்பட முடியாது. குறிப்பாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் அயல் நாடாகவும் நட்புநாடாகவும் விளங்கும் இலங்கையும் இலங்கைவாழ் மக்களும், பிரதமர் டட்லி பிரார்த்தித்தது போன்று இந்திய மக்களும் பாகிஸ்தான் மக்களும் சண்டையை விடுத்து சமாதானமாக வாழ வேண்டும் எனப் பிரார்த்திப்பதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?

இலங்கையிலும் வகுப்புத் துவேஷக் கூச்சலின் விளைவுகளை 1956-ம் ஆண்டிலும் 1958-ம் ஆண்டிலும் மக்கள் கண்டு அனுபவித்திருக்கிறார்கள். மீண்டும் அத்தகைய ஒரு நிலை ஏற்படக் கூடாதென்பதே அனைவரினதும் பிரார்த்தனையாகும். என்றாலும் சுயநல நோக்கங் கொண்ட சிலர் இன, மத துவேஷக் கூச்சலை மீண்டும் கிளப்ப முயற்சி செய்கின்றனர் என்பது பகிரங்க இரகசியம். துவேஷக் கூச்சலும் பிரிவினைக் கோஷமும் இலங்கையைப் போன்ற சிறிய நாட்டிற்கு எவ்வளவு ஆபத்தாக முடியுமென்பதைபிரதமர் டட்லி சுட்டிக்காட்டி இன, மத ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்தியிருக்கிறார். தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டதன் மூலம் தோன்றியுள்ள இந்த ஒற்றுமையைப் பிரதமர் டட்லியும் அரசாங்கமும் மட்டுமல்ல இதர தலைவர்களும்பொது மக்களும் நிலைநாட்டி நாட்டை சமூக பொருளாதாரத் துறையில் அபிவிருத்தியடையச் செய்வார்களென்று நம்புகிறோம். சிறுபான்மையினர் திருப்தியுடன் வாழமுடிந்தால் தான் ஒருநாட்டில் ஒற்றுமையேற்பட முடியுமென்பதையும், ஒற்றுமையினால்தான் நாடு முன்னேற முடியுமென்பதையும் இலங்கை மக்கள் இனியும் உணரமுடியாமலிருக்கமுடியாது.

இதேசமயம் இந்திய-பாகிஸ்தான் யுந்தத்தை வைத்து இங்கு சிவர் ஆதரவு, எதிர்ப்புக் கூட்டங்களை நடத்தத்திட்டமிட்டு அறிவித்தல்களும் வெளியிட்டிருந்தனர். இது இலங்கை அனுஷ்டிக்கும் கொள்கைக்கோ. இலங்கைவாழ் மக்களின் ஐக்கியத்தைப் பாதுகாக்கவோ ஏற்றதல்ல. இக்கூட்டங்கள், இதுவரை நடைபெறவில்லை. இனியும் நடைபெருதென்றே எதிர்பார்ப்போம். யுத்தத்தில் இந்தியா வெற்றி பெறுவதோ பாகிஸ்தான் தோல்வியடைவதோ, அல்லது பாகிஸ்தான் வெற்றிபெற்று இந்தியா தோல்வியடைவதோ இலங்கை மக்களின் விருப்பமாக இருக்கமுடியாது இந்தியாவும் பாகிஸ்தானும் சகோதர நாடுகளாக, இந்திய மக்களும் பாகிஸ்தான் மக்களும் சகோதரர்களாக வாழ வேண்டுமென்பதே இலங்கை மக்களின் விருப்பமாக இருக்கவேண்டும்.

# தமிழ் சாகித்திய விழா விபரங்கள்

## பரிசுபெற்றவர்களுக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், திங்.

''கணவன்மீது [illegible] வைத்த மாசற்ற அன்பு ஒன்றினுல் தான் கண்ணகி சிலப்பதிகாரத்தில் காப்பியக் கதாநாயகியாக்கப்பட்டாள். கண்ணகியினுடைய அழகு அவளை இலக்கியத்தில்நிலை பெறச் செய்யவில்லை அன்பு ஒன்றினுல் தான் அவள் இலக்கியத்தில் நிரந்தரமான இடத்தைப்பெற்றுள்.''

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தமிழ் சாகித்திய விழாவில் 'வாழ்வும் இலக்கியம்' என்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசுகையில் வித்துவான் பொன். முத்துக்குமாரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மேற்படி தமிழ் சாகித்திய விழா பாரதி தினத்தில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

திரு. முத்துக்குமாரன் மேலும் பேசுகையில் கூறியதாவது;-

''சில்ப்பதிகாரத்தை உற்றுக் கவனிக்கும்போது பரத்தையர் வழியில் வந்த மாதவிகூடகாவிய மங்கையாக இடம் பெற்றிருப்பதைப் பார்க்கக்கூடியதாக இருக்கிறது. அவள் பரத்தையர் வழியில் வந்ததாக விருந்தபோதிலும் அவளுடைய உயர்ந்த அன்பு வைத்த பண்பு ஒன்றினுலேயே இலக்கியத்தில் நிரந்தர இடம் பெற்றுள்.

இவைகளையெல்லாம் நோக்கும் போது வாழ்க்கை இலக்கியமாவதற்கு அன்பு ஒன்றுதான் வேண்டும் என்பதை எடுத்துக் காட்டி விடுகிறது.''

பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

''எழுத்தாளன் சமூகத்தின் பிரதிநிதி. அவன் படைக்கும் இலக்கியங்கள் நீண்ட காலத்துக்கு வாழக்கூடிய இலக்கியங்களாக இருக்க வேண்டும். கடந்த காலத்தை, நிகழ் காலத்தை, எதிர்காலத்தை மனதில் வைத்து இலக்கியங்கள் படைக்கப்பட வேண்டும். நடந்த காலத்தை மட்டும் வைத்து இலக்கியங்களைப் படைப்போமானல் அது வாழமாட்டாது.''

கவிஞர் மு. செல்லையா பேசுகையில், இலக்கியம் படிப்பவர் உள்ளத்தைத் தூய்மையாக்கக் கூடிய விதத்தில் படைக்கப்படவேண்டுமென்று சொன்னுர்.

திரு சி. சரவணபவான் (சிற்பி) பேசுகையில், மேல்நாட்டு இலககியங்களைக் கண்மூடித்தனமாக நம் நாட்டு எழுத்தாளர்கள் 'காப்பி' அடிப்பதை வன்மையாகக் கண்டித்தார்.

விழாவின் பிற்பகல் நிகழ்ச்சிகள் முன்னுள் செனட்டர் திரு ஏ.எம்.ஏ. அஸீஸ் தலைமையில் நடைபெற்றது. வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் திரு ச. அம்பிகைபாகனின் வரவேற்புரையை அடுத்து திரு. அஸீஸ் தலைமையுரை நிகழ்த்தினுர்.

அவர் தமது தலைமையுரையில், இம்முறை சாகித்திய மண்டலத்தில் மூன்று பரிசுகளுக்கு நான்கு புத்தகங்களே போட்டியிட்டன வென்றும், இப்படியான நிலை மாறி இந்நாட்டில் பல புத்தகங்கள் வெளியிடப்பட வேண்டுமென்றும், பிரசுரகர்த்தாக்கள் நம்நாட்டு எழுத்தாளர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்க வேண்டுமென்றும் கூறினுர்.

'மரபு' முற்போக்கு இரண்டுமே நமக்கு அவசியமென்றும் கூறினுர்,

மாணவர்களுக்காக நடத்திய சாகித்திய மண்டலப் பிரிசுப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்களை கலாநிதி ஆனந்த குருகே வழங்கினுர். ஸ்கந்தவரோதயாக் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் பெரி. சண்முகநாதனுக்கு 'கவிதை'ப்போட்டியில் வெள்ளிப்பதக்கமும், சிறுகதைப் போட்டியில் உடிஸ்பற்று அரசினர் பாடசாலையைச் சேர்ந்த செல்வன் பன்னீர்ச்செல்வத்துற்கு தங்கப்பதக்கமும் வழங்கப்பட்டன.

இதனையடுத்து சாகித்திய மண்டலப் பரிசுபெற்ற பண்டிதர் வி. சீ. கந்தையா, புலவர். சின்னையா, திரு சோ. நடராசா ஆகியோர்களுக்கு பாராட்டுரைகள் வழங்கப்பட்டன.

### பாராட்டுக்கள்

பண்டிதர் க. நாகலிங்கம், திரு வி. சீ. கந்தையாவைப் பாராட்டிப் பேசுகையில், திரு வி. சீ. கந்தையாவின் மட்டக்களப்புத் தமிழகத்தில் வெளியாகியுள்ள 'நாட்டுப்பாடல்களை' அவர் பலவிதமான ஆராய்ச்சிகளுக்குப் பின்தான் வெளியிட்டிருக்கிறுரென்றும், 'மட்டக்களப்புத் தமிழகத்துக்கு எதிராக வெளிவந்த கண்டனத் துண்டுப் பிரசுரங்கள் எல்லாம் 'மட்டக்களப்புத் தமிழகத்' துக்கு விளம்பரத்தையே தேடிக் கொடுத்தனவென்றும், வி. சீ. கந்தையா செய்த இந்த இலக்கிய சேவைக்காக மட்டக்களப்பு மக்கள் மட்டுமல்ல, தமிழ்ப்பேசும் மக்கள் அனைவருமே கடமைப்பட்டவர்களென்றும் சொன்னுர்.

பண்டிதர் கி. நடராசன் புலவர் சின்னையாவைப் [illegible] பேசுகையில், [illegible]மைக்குத்தான் சாகித்

(6-ம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி கல்விப் பொருட்காட்சி

'யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கல்விப் பொருட்காட்சியைப் பார்க்கவா வருகிறீர்கள்? வாருங்கள்! வந்து நல்லபயனைப் பெற்றுச் செல்லுங்கள்'' என்று யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி கல்விப் பொருட்காட்சி நுழைவாயலில் ஒரு ரேடியோ அலறிக்கொண்டிருந்தது, ஏது, கொழும்பு வானொலியிலிருந்துதான் இந்துக் கல்லூரியைப்பற்றி அறிவிக்கிருர்கள் என்று நினைப்பதற்கு முன், இந்துக் கல்லூரி மாணவர்களுடைய 'மூளை'த் திறமையாலேயே செய்யப்பட்ட ''டிரான்ஸ் மிற்றர்'' மூலம் தான் வேறு ஒருஇடத்திலிருந்து ஒரு மாணவரின் குரல் ரேடியோவுக்குள் புகுந்து 'விளையாடி'க் கொண்டிருந்ததென்பதைத் தெரிந்து கொள்ளமுடிந்தது. இதுவொன்றே யாழ்ப்பாண இந்துக்கல்லூரி 75-வது ஆண்டு விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட கல்விப் பொருட்காட்சிக்கு எடுத்துக்காட்டு,

வான மண்டலத்துக்குச் செல்லும் ராக்கெட் எப்படிச் செல்கிறதென்பதை நேரடியாக நாம் பார்க்காவிட்டாலும் இந்துக் கல்லூரியில் காட்டப்பட்ட கல்விப் பொருட்காட்சியில் காணக்கூடியதாக விருந்தது மின்சார பல்புக்கள் மூலம் பாதைகளை அமைத்து, தமது செயல் திறமையால் 'ராக்கெட்'டுகள் செல்லும் முறையை அற்புதமாகவிளக்கிக் காட்டினுர்கள் இந்துக் கல்லூரி மாணவர்கள், அமெரிக்கா அண்மையில் அனுப்பிய 'மரீனர் 5' ராக்கெட் எப்படி வானவெளியில் சஞ்சரித்தது என்பது பற்றி நல்ல படங்களுடன் விளக்கிக் காட்டினுர்கள். இலங்கையிலும் சந்திரமண்டலத்துக்குச் செல்லக்கூடிய திறமையான விஞ்ஞானிகள் இருக்கிருர்கள் என்பதை இந்துக்கல்லூரி மாணவர்களுடைய கல்விப் பொருட்காட்சி சொல்லாமல் சொல்கிறது.

சின்ன வகுப்பு மாணவர்கள் செய்துவைத்த டபிள் டெக்கர் பஸ்கள், கப்பல்கள் அவர்களுடைய எதிர்காலத்தை எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. மொத்தத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் விஞ்ஞானவளர்ச்சியைப் பார்க்கக்கூடிய விதத்தில் இந்தப் பொருட்காட்சி அமைந்திருந்தது.

--- பாமா

## ஆலய புனருத்தாரணம்

கோண்டாவில், ஞாயிறு

கோண்டாவில் மேற்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோவிலின் புனருத்தாரண வேலைகள் சென்ற ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை தர்மகர்த்தா சபைக் காரியதரிசி திரு. [illegible] மேற்கொண்டுள்ளனர்.

# ஐயாறன் எழுதுகிறது

கவர்னர் ஜெனரல் கோபல்லவாவின் தலைமையிலே கொழும்பு புதிய நகரமண்டபத்தில், ஆனந்தகுமாரசுவாமிக்கு அஞ்சலி செலுத்திய ஒரு முக்கிய கூட்டத்துக்கு சென்றிருந்தேன். (நகரமண்டபத்துக்கு தமிழில் ''நகரசபை சாலை'' என்று மொழிபெயர்ப்புக் கொலை செய்திருப்பதைக் கண்டேன். இதை சம்பந்தப்பட்டவர்கள் உடன் திருத்துவார்களா?)

மண்டபத்தில் பாதிதான் கூட்டமிருந்தது என்றுலும் மந்திரிகள், ஸ்தானிகர்கள், சிங்கள, தமிழ் பிரமுகர்கள் பலரும் கூடியிருந்து ஒரு தமிழருக்கு மரியாதை தெரிவித்தது குறிப்பிடக்தக்கது.

⁂ ⁂

தலைவர் உள்ளிட்டு எல்லோரும் ஆங்கிலத்தில் தான் பேசினர். இந்திய ஹைகமிஷனரைத்தவிர எல்லாரும் எழுதிப்படித்தனர். ஹைகமிஷனர் பீம்சென் சச்சார், தூயவெள்ளையுடையுடனே மேடைமீது நின்று பேசியது, நேருவை நினைவூட்டுவதாக இருந்தது. கலை முதலிய விஷயங்களில் இந்தியா —இலங்கை நல்லுறவுகளை பெரியார் ஆனந்தகுமாரசுவாமி உலகத்துக்கு அறிவித்ததைக் குறிப்பிட்டு; அந்தப் பரம்பரைச் செல்வத்தை வளர்க்கவேண்டிய பொறுப்பு நமக்கு உள்ளதென்றும், இவ்விஷயத்தில் இலங்கையே தலைமைதாங்கி மேலான சேவை செய்துள்ளதாயும் ஹைகமிஷனர், உணர்ச்சி ததும்பப்பேசி, சபையோரின் மனதைக் கவர்ந்ததுடன், தாம் மேலான ஒரு பேச்சாளி என்பதையும் நிலைநாட்டினுர்.

அவரைக் கண்டதும் இந்திய-பாகிஸ்தான் துரதிருஷ்ட சண்டைதான் நினைப்பு வந்தது. நமக்கே மனம் மிகவும் வேதனைப்படுகையில் அவருக்கு எப்படி இருக்கும். என்றுலும் அவர் இதைப் பொருட்படுத்தாமல், அக்கூட்டத்துக்குவந்து பேசியது பாராட்டத்தக்கது. இந்தியாவின் கௌரவத்துக்குகந்த முறையில் அவர் பேசி, அங்கு கூடியிருந்த இலங்கைப் பிரமுகர்களின் மதிப்பையும் அனுதாபத்தையும் தம் நாட்டுக்கு, இதன்மூலம் அவர்பெரிதும் பெற்றுவிட்டார்.

ஃ ஃ ஃ

நன்றிகூறிய விஜயதிலக (ஆனந்தாக்கல்லூரி முன்னுள் அதிபர்) இந்திய-பாகிஸ்தான் சண்டையை, மகாபாரதயுத்தத்துக்கு ஒப்பிட்டார். பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும்சண்டை நடக்கையில், போர்க்களத்திலிருந்து அருச்சுனன் தனித்து வந்து கிருஷ்ணபரமாத்மாவுடன் சம்பாஷித்ததாயும் அதன்பயனுக பகவத்கீதை எனும் அரிய நூல் உலகமக்களுக்குக் கிடைத்ததாயும், டில்லிதான் பாரத யுத்தம் நடந்த பழைய அஸ்தினுபுரமென்றும், அர்ச்சுனனைப்போல்இப்போது ஹைகமிஷனர் ஸச்சார் இலங்கையில் இக்கூட்டத்துக்கு வந்து கலந்து கொண்டதாகவும் கூறிப்பாராட்டினுர், இந்தியாவைப் பாண்டவர்களுக்கு அவர் ஒப்பிடுகையில், என் மனதில் ஏதேதோ எண்ணங்கள்எல்லாம் ஓடின. தலைமை வகித்த கவர்னர் ஜெனரல். தமது நடுநிலைமைக்கொள்கையை, இப்பேச்சு பாதிக்குமென்று நினைத்தாரோ என்னவோ!

கூட்டத்தில் ஒவ்வொருவரும் 10 நிமிஷம்தான் பேச

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லாகூரில் உக்கிரமான போர்: பாக். கமாண்டர், மேஜர்ஜெனரல், பிரிகேடியர் கொல்லப்பட்டனர்

## யுதாண்டிடம் பாக். 3 அம்சதிட்டம்: இருதரப்பிலும் 1750 பேர் பலி

### 205 டாங்கிகள், 56 விமானங்கள் அழிக்கப்பட்டன

**பம்பாயைத்தாக்க பாக். முயற்சி; சியால்கோட்டில் இந்தியாமுன்னேற்றம்**

**(நேற்று பகல்வரை கிடைத்த செய்திகள்)**

லண்டன், செப். 12

லாகூர் முனையிலும் சியால் கோட் பகுதியிலும் இந்திய—பாகிஸ்தான் படைகளுக் கிடையே உக்கிரமான போர் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக இன்று அறி விக்கப்பட்டது. இப்பகுதிகளில் இந்தியா முன்னேறிக் கொண்டு வருவதாகக் கடைசியாகக் கிடைத்த செய்திகள் கூறுகின்றன. நேற்றைய சண்டையில் மட்டும் இந்தியப்படைகள், விமானங்களின் உதவியுடன் ஏராளமான பாகிஸ் தான் டாங்கிகளை அழித்து பதினைந்து டாங்கிகளைக் கைப்பற்றினர். லாகூரின் பல பகுதிகளில் நேற்று இந்திய பாகிஸதான் படைகளுக்கிடையே நிகழ்ந்த கோரச் சண்டையில் பாகிஸதானைச் சேர்ந்த பல கமாண்டர்களும் பிரிகேடி யர்களும் மேஜர் ஜெனரல் ஒருவரும் கொல்லப்பட்டனர் என்று இந்தியா இன்று அறிவித்தது. இ...ர்கள்; பாகிஸதான் ஆயுத, பீரங்கிப் படைகளைச் சேர்ந்தவர் களாகும். இதுதவிர ஏராளமான சிரேஷ்ட பாகிஸதான் அதிகாரிகள் இந்தியப் படைகளிடம் சரணடைந்திருப்பதாகவும் இன்று அறிவிக்கப்பட்டது. லாகூரின் பல பகுதிகளிலும் இன்றும் கடுமையான சண்டை நடைபெற்றது.

### பம்பாயைத் தாக்குவதில் முயற்சி

நேற்று பாகிஸ்தான் யுத்தவிமானமொன்று பம்பாய்மீது பறந்து வந்தது. பம்பாய்மீது குண்டுகளைவீச அது தயாராக வந்த போதிலும் இந்திய விமானங்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளினால் பாகிஸ்தான் விமானம் உடனடியாகத் திரும்பி மறைந்துவிட்டது என்று அறிவிக்கப்பட்டது. பாகிஸ்தான் விமானங்கள் இதற்கு முன்னர் இரண்டு தடவைகள் பம்பாயைத் தாக்குவதில் ஈடுபட்டிருந்தன. ஆனால் முயற்சிகள் முறியடிக்கப்பட்டிருந்தன.

### லாகூரில் கோர சண்டை

லாகூர் முனையில் இந்திய-பாகிஸ்தான் படைகளுக்கிடையே கோரச்சண்டைகள் நடை பெற்றுவருகிறது. இருதரப்பினடும் பீரங்கிகளால் தாக்கி ஏராளமானசேதத்தை ஏற்படுத்திவருகின்றனர். சியால் கோர்ட்டில் நேற்று இந்திய விமானங்கள் குண்டுகளைப் பொழிந்து தள்ளின. மேற்குப் பாகிஸ்தானின் இராணுவ இலக்கு கள்மீதும் காவல்நிலைகள்மீதும் இந்திய விமானங்கள் தாக்குதல் நடத்தின.

### ராஜஸ்தானில் பாக். தாக்குதல்

ராஜஸ்தான் தலைநகர் ஷில்லாங்கிலும் மற்றும் சில பகுதிகளிலும் பாகிஸ்தான் விமா னங்கள் கடந்த மூன்று தினங்களாகத் தாக்குதல்கள் நடத்திவருகின்றன. ராஜஸ்தானில் நேற்று ஒரு இந்திய நிலைமீது பாகிஸ்தான் தாக்குதல்கள் நடத்தின. கடுமையான சண்டைக்குப் பின்னர் இந்தியப் படைகள் பாகிஸ் தானை பின்வாங்கச் செய்தது.

### இந்திய படைகள் வசம் ஊரி, பூஞ்ச்

ஊரி, பூஞ்ச் பகுதிகளில் பாகிஸ்தான் படைகள் தீவிரமாகத் தாக்குதல்கள் நடத்தி வந்தபோதிலும் இப்பகுதிகள் இப்பொழுது இந்தியப் படைகளின் பூரண கட் டுப்பாட்டில் இருந்துவருகின்றன. இப்பகுதிகளில் பாகிஸ்தான் படைகள் தொடர்ந்து தாக்குதல்கள் நடத்திவருகின்றன.

### 172 பாக். டாங்கிகள் அழிக்கப்பட்டன

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே கடந்த பதினெரு நாட்களாக நடை பெற்றுவரும் சண்டையில் மொத்தம் 172 பாகிஸ்தான் டாங்கிகள் அழிக்கப் பட்டன என்றும் சுமார் 33 பாகிஸ்தான் விமானங்கள் ஆகாயத்தில் சுட்டு வீழ்த்தப்பட்டன (தரையில் சேதப்படுத்தப்பட்டவை— அழிக்கப்பட்டவை இதில் அடங்காது) என்றும் அறிவிக்கப்பட்டது. பாகிஸ்தானின் பத்தொன் பது டாங்கிகள் பிடிக்கப்பட்டுள்ளன. இந்திய தரப்பில் 23 விமானங்களும் 33 டாங்கிகளும் அழிக்கப்பட்டன.

### 1750 பேர் கொல்லப்பட்டனர்

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நடைபெற்றுவரும் யுத்தத்தில் இருதரப் பிலும் மொத்தம் 1750 பேர் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டுள் ளது. பாகிஸ்தான் தரப்பில் 1500 பேரும் இந்திய தரப்பில் 250 பேரும் மாண்டதாகச் செய்திகள் கூறுகின்றன.

### பாகிஸ்தானின் மூன்று அம்ச திட்டம்

இந்தியபா-கிஸ்தான் சண்டையைத் தீர்த்துவைப்பதற்காகக் ராவல்பிண்டிவந்து பாகிஸ் தான் அதிபர் பீல்ட் மார்ஷல் அயூப்கானுடனும் வெளிநாட்டு மந்திரி புட்டோ வுடனும் பேச்சுக்கள் நடத்திய ஐ. நா தலைமைக் காரியதரிசி யுதாண்டிடம் பாகிஸ்தான் மூன்று அம்சத் திட்டமொன்றைச் சமர்ப்பித்துள்ளது. ஆனுல் இந்தத் திட்டம் முழுமையாகச் சமர்ப்பிக்கப்படவில்லையெனத் தெரியவருகி றது. பாகிஸ்தானின் மூன்று அம்சங்களும் வருமாறு:—

- யுத்த நிறுத்தம் ஏற்படுவதற்கு முன்னர் காஷ்மீரிலிருந்து இந்தியப் படைகளும் பாகிஸ்தான் படைகளும் முழுமையாக வெளியேற்றப்படவேண்டும். சண்டைக் குப் பின்னர் புதிதாகப் பிடித்துள்ள நிலைகளிலிருந்து இரு தேச படைகளும் வாபஸ் பெறப்படவேண்டும்.
- ஆசிய—ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த ஒரு ஐக்கிய நாடுகள் சமாதானப் படை நிறுவப்படவேண்டும். யுத்த நிறுத்தக் கோட்டை அவர்கள் கண்காணிக்க வேண்டும்.
- மூன்று மாத காலத்துக்குள் காஷ்மீரில் சர்வஜன வாக்கெடுப்பு நடைபெறவேண் டும்

### செய்யத் அகமதுக்கு பாக். தஞ்சம்

ஐக்கியஅரபுக் குடியரசு அதிபர் நாஸரைக் கொலைசெய்ய முயற்சித்ததாகக் கூறப் படும் செய்யத் அகமட் என்பவருக்கு பாகிஸ்தான் தஞ்சம் [illegible] இன்று வெளியான சில ஏஜன்ஸி செய்திகள் கூறுகின்றன (4-ம்பக்கம் பார்க்க)

---

யுத்தநெருக்கடி

## பாகிஸ்தான் இராணுவ நடவடிக்கை காரணம்

### ரஷ்யப் பிரதமர் கடிதம்

மாஸ்கோ, செப். 12

பாகிஸ்தான் அதிபர் பீல்ட்மார்ஷல் அயூப்கான் சோவியத்பிரதமர் கோஸிஜி னுக்கு அனுப்பிய கடிதமும், கோஸிஜின் அனுப்பிய கடித மும் இன்று வெளியிடப் பட்டது.

அதிபர் அயூப்கானுக்கு கோஸிஜின் எழுதிய கடிதத் தில்; பாகிஸ்தானின் இரா ணுவ நடவடிக்கைகளே தற் போதைய யுத்த நெருக் கடிக்குக் காரணம் என்று குறிப்பிட்டுள்ளார்.

''இந்திய - பாகிஸ்தான் சண்டைகள் உலக சமா தானத்தை முன்னிட்டு உட னடியாக நிறுத்தப்பட வேண்டும். அமைதியான தீர்வுகள் மூலம் இப்பிரச் னையைத் தீர்க்க முன்வர வேண்டும்'' என்றும் பிரத மர் கோஸிஜின் அக்கடிதத் தில் தெரிவித்துள்ளார்.

---

## பாகிஸ்தானுடன் பயனுள்ள பேச்சுக்கள் நடைபெற்றன

### யுதாண்ட் கருத்து

புதுடில்லி, செப். 12

**ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் இன்று புதுடில்லி வந்து சேர்ந்தார். இங்கு அவர் இருதினங்கள் தங்கி யிருப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.**

ராவல்பிண்டியில் அதிபர் அயூப்கானுடனும் பாகிஸ் தான் வெளிநாட்டு மந்திரி புட்டோவுடனும் ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதா ண்ட் நடத்திய பேச்சு வார்த்தைகள் பலனுள்ள முறையில் அமைந்திருந்தன என்று ஐ. நா வட்டாரங் கள் தெரிவிக்கின்றன.

யுதாண்ட் நடத்திய பேச் சுக்களில் முட்டுக்கட்டைகள் எதுவும் ஏற்படவில்லை என் றும் கூறப்படுகிறது

ராவல்பிண்டியிலிருந்து நேற்றிரவு பம்பாய் வந்து சேர்ந்த ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் ஒரு இரவை அங்கு கழித்து விட்டு இன்று காலை புது டில்லி வந்துசேர்ந்தார். இங்கு அவர் நிருபர்களிடம் தெரிவிக்கையில்; பாகிஸ் தான் தலைவர்களுடன் பய னுள்ள பேச்சுக்கள் நடத் தியதாகக் கூறினர்.

யுதாண்ட் இன்றும் நாளை யும் புதுடில்லியில் தங்கி யிருந்து இந்தியத் தலைவர் களுடன் பேச்சுக்கள் நடத் துவார் எனத் தெரியவரு கிறது.

---

## இந்தோனேஷிய தூதரகம் முன் இந்தியர்கள் ஆர்ப்பாட்டம்

புதுடில்லி, செப்.12

புதுடில்லியிலுள்ளஇந்தோ னேஷிய தூதரகம்முன நேற்று ஆயிரத்துக்கு மதிக மான பல்கலைக்கழக மாண வர்கள் ஆர்ப்பாட்டம் நட த்தினர்.

சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஏழு பேர் நேற்று இந்தோனே ஷிய தூதரகத்துக்குச் சென்று, இந்தோனேஷிய ஜனதிபதி சுகர்னேவின் முழு உருவப் படத்தை உடைத்தெறிந்தனர்.

பொலிஸார் இவர்களைக் கைது செய்து பின் விடுதலை செய்தனர்.

ஜாகர்த்தாவிலுள்ள இந் திய தூதரகம்முன் இந்தோ னேஷியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தி அதிகமான சேதத் தை விளைவித்திருந்ததை ஆட்சேபித்தே இந்தியாவில் இப்படியான ஆர்ப்பாட்டங் கள் தலைகாட்டியுள்ளன,

---

## பாகிஸ்தானுக்கு உதவி

அங்காரா, செப். 12

பாகிஸ்தானுக்கு உதவுவ தென்று ஈரானும் துருக்கி யும் சம்மதித்திருப்பதாக இங்கு அறிவிக்கப்பட்டது.

## ஸிரியாவும் உதவும்?

டமாஸ்கஸ், செப். 12

பாகிஸ்தானின் நிலையை ஆதரிப்பதாகவும பாகிஸ்தா னின் கோரிக்கையை ஏற்று அங்கு செல்ல துருப்புகள் தயாராகவிருக்கிறதென்றும் ஸிரியா அறிவித்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

---

## கோரிக்கை

திருக்கோணமலை, ஞாயிறு

புகையிரத வாரண்டுகளை உபயோகித்து பஸ்கள் மூலம் பிரயாணஞ் செய்ய ஆசிரி யர்கள் உட்பட எல்லா அரசாங்க ஊழியர்களையும் அனுமதிக்க வேண்டுமென அகில இலங்கை ஆங்கில உதவி ஆசிரியர்கள் சங்கம் போக்குவரத்து அமைச்சர் திரு இ.எல். பி. ஹுருள்ள யைக் கேட்டுள்ளது.

---

## பூங்காவனத் திருவிழா

கோண்டாவில், திங்கள்

கோண்டாவில் கந்தர் வளவுஸ்ரீமகா கணபதிப்பிள் ளையார் கோவிலில் பூங்கா வனத்திருவிழா இன்றுநடை பெறும். காலை விசேஷ நிகழ்ச்சிகளுடன் சங்காபி ஷேகமும் அன்னதானமும் நடைபெறும். இரவு விநா யகப் பெருமானும் அம்மா ளும் மின்சாரதீபங்களால் அலங்கரிக்கப்பட்ட அன்னப் பட்சியில் வீதிவலம் வரு வார்கள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கார்-வான் விபத்து

உடுப்பிட்டி, ஞாயிறு

உடுப்பிட்டி இளையதம்பி குலசிங்கத்திற்குச் சொந்தமான காரும் வல்வெட்டித்துறை கொம்மன்தறையைச் சேர்ந்த நாராயணசாமி அல்லது சோதி என்பவருக்குச் சொந்தமான வானும் தொண்டமானாற்றையும்உடுப்பிட்டியையும் நோக்கிச் சென்றுகொண் டிருக்கையில் மொட்டைப்புளியடி என்ற இடத்தில்இருவாகனங்களும் மோதுண்டு பலத்த சேதத்துக்குள்ளாயின.

காரில் பிரயாணம் செய்த குமாரகுலசிங்கமும் அவரது மனைவியும் சிறிதுகாயத்துக்குள்ளாயினர். கார்ச்சாரதியான இளையதம்பி குலசிங்கம் மயக்கமுற்ற நிலையில் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வானில் சென்ற மூவரில் சாரதியானசின்னத்தம்பி தவராசா புலோலி அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மற்றும் இருவர் தெய்வாதீனமாக உயிர்தப்பினர்.

வல்வெட்டித்துறைப் பொலிஸார் உடன் ஸ்தலத்திற்குச்சென்று விசாரணை நடத்தினர்.

## தகராறு?

உடுப்பிட்டி, ஞாயிறு

செல்வச் சந்நதி ஆலய தீர்த்தத் திருவிழாவன்று பருத்தித்துறை டிப்போவைச் சேர்ந்த பஸ் ஊழியர்கள் சிலருக்கும் நெல்லியடிப் பகுதியில் காணப்படும்வான்காரர் சிலருக்குமிடையே தகராறு ஏற்பட்டு இறுதியில் கைகலப்பில் முடிந்ததாகத் தெரிகிறது. பிரயாணிகளை ஏற்றுவது சம்பந்தமாக ஏற்பட்ட போட்டி மனப்பான்மையே இத்தகராறுக்குக் காரணமெனத் தெரிகிறது.

இம்முறை இலங்கைப் போக்குவரத்துச்சபை தொண்டமானாறு செல்வச் சந்நதி ஆலய உற்சவதினங்களுக்குத் தினசரி அதிகமான பஸ்களை சேவைக்கமர்த்தி பிரயாணிகளுக்குப் பெரிதும் உதவியது. வழக்கத்தை விட இம்முறை நெல்லியடிச்சந்தியில் இருந்தே அதிகமான பஸ்கள் செல்வச்சந்நதிக்கு ஓடவிடப்பட்டன.

## மாணவரின் போக்குவரத்துக் கஷ்டம்

உடுப்பிட்டி. ஞாயிறு

யாழ். கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களின் பிரயாண வசதிக்காக கல்லூரி ரஸ்தா முன்பாகப் பஸ் சேவையை ஏற்படுத்தவும், சகல தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்களுக்கும் ஏனைய கல்லூரி மாணவர்களைப் போன்று அரைக்கட்டணச் சலுகை பஸ்ஸில் பிரயாணம் செய்வதற்கு வழங்கப்படவேண்டுமெனவும் கொக்குவில் கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் விடுத்த கோரிக்கையை கோப்பாய் எம்.பி. திரு. சி கதிரவேற்பிள்ளை ஏற்றுக்கொண்டு இப்பிரச்னைகளைத் தீர்ப்பதற்குத்தாம் தீவிரமுயற்சி எடுப்பதாக வாக்களித்துள்ளார்.

## திருடர்கள் தொல்லை அதிகரிப்பு

சுழிபுரம், ஞாயிறு

பண்டத்தரிப்பு பகுதியில் திருடர் தொல்லை கடந்த சில தினங்களாக அதிகரித்துள்ளன. நேற்று முன்தினம் ஒரு பெண்மணிக்குச் சொந்தமான வீட்டில் பல நகைகள் களவுபோய்விட்டதாகப் புகார்செய்யப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாகப் பொலிஸார் புலன்விசாரணை செய்துவருகிறார்கள்.

## இப்படியும் நடந்தது

காங்கேசன்துறை, ஞாயிறு

நேற்று மாலை காங்கேசன் துறை வீடொன்றில் பட்டப்பகலில் நடைபெற்ற திருட்டொன்றுசம்பந்தமாக நடுத்தரவயதுடையபெண் காங்கேசன்துறைப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

நடுத்தர வயதுடைய ஒருவருடன் அப்பெண் சின்னக்குட்டி சரவணமுத்து என்பவருடையவீட்டிற்குச்சென்றபோது, அந்தநபர்அங்குபணத்தைத்திருடிக்கொண்டு ஓடியதாகவும் அவருடன்சென்ற பெண்ணை அங்கிருந்த சிலர் ''லாவக'' மாகப் பிடித்து காங்கேசன்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனராம்.

## உள்ளூராட்சி மன்ற சமாஜ மகாநாடு

### வவனியாவில் நடைபெறும்

திருக்கோணமலை, ஞாயிறு

அகில இலங்கை தமிழ் பேசும் உள்ளூராட்சி மன்றங்களின் சமாஜ இரண்டாவது வருடாந்த மகாநாடு செப்டம்பர் கடைசிப் பகுதியில் வவனியாவில் நடைபெறலாமென மேற்படி சமாஜச் செயலாளர் திரு. வ. நா. தம்பிராசா நமது திருமலை நிருபரிடம் தெரிவித்துள்ளார்.

வவனியாவில் இம்மகாநாட்டை சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகளை வவனியா நகரசபைத்தலைவர் திரு. எம். பொன்னையா செய்துவருவதாக திரு, தம்பிராசா மேலும் தெரிவித்தார்.

## ஓவியருக்கு பொற்கிழி

கோண்டாவில், ஞாயிறு

யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஓவியர் எஸ். சிவப்பிரகாசத்துக்கு கொக்குவில் மஞ்சவனம்பதி கந்தசுவாமி கோவிலில் நேற்று பஞ்கர்த்தாக்கள் பொற்கிழி வழங்கி கௌரவித்தனர்.

திருப்பெருங்குன்ற திருக்கல்யாண காட்சி அறுபடை வீடு—முதல்படை வீடு காட்சியை திரைச்சீலையில் வரைந்து கொடுத்ததை பாராட்டும் முகமாக இப்பொற்கிழி அவருக்கு வழங்கப்பட்டிருந்தது.

பொற்கிழியை திரு. பொன்னம்பலம் வழங்கினார். திரு. குருசாமி வரவேற்று பேசினார் திரைச்சீலையை திரு. சுப்பையா திரைநீக்கம் செய்தார்.

# "தமிழரின் கட்சிகள் ஒன்றாகஇயங்க வேண்டும்"

## கரவெட்டியில் நியமன எம். பி. திரு. தொண்டமான் பேச்சு

உடுப்பிட்டி, ஞாயிறு

''மலைநாட்டுத் தமிழர்களும் யாழ்ப்பாணத்தமிழர்களும் என்றும் ஒற்றுமைப்பட்டவர்களே. இன்று தமிழர்கள்சார்பில் தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ் கட்சி, தொழிலாளர்காங்கிரஸ்கட்சி ஆகிய மூன்று கட்சிகள் தேசீய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றன. இம்மூன்று கட்சிகளும் ஒன்றுசேர்ந்து இயங்கவேண்டும். தேசீய அரசாங்கம் ஓரளவிற்குச் சிறுபான்மை மக்களின் பிரச்னைகளைத் தீர்த்துவைக்கும்''.

இவ்வாறுஇலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமான் எம். பி. கரவெட்டி குருகுல மக்கள் சார்பில் கரவை விக்கினேஸ்வரக் கல்லூரியில் நடைபெற்ற உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரத்தின் வரவேற்புக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

திரு. கா. சிவத்தம்பி தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திரு. தொண்டமான் தொடர்ந்து பேசியதாவது:—

சமசமாஜ — கம்யூனிஸ்ட் தலைவர்கள் இன்று வகுப்புவாதத்தைத் தூண்டிவிடுவதில் முன்னிற்கிறார்கள். இவர்கள் மாக்சிசம் பேசுவதில் என்ன அர்த்தம் என்றே எனக்குப் புரியவில்லை. தேசீய அரசாங்கத்தையும் அதன் ஆதரவாளர்களையும் குறைகூறுவதுதான் அவர்கள் தொழிலாகிவிட்டது.

இலங்கை இந்தியர்களின் பிரச்சினை பற்றிச் சென்ற கூட்டரசாங்கத்தை விட தேசீய அரசாங்கம் அதிக முயற்சி எடுக்குமென நம்புகிறேன்''.

தலைவர் திரு. கா. சிவத்தம்பிபேசுகையில் குறிப்பிட்டதாவது:

''கரவெட்டியில் வசிக்கும் குருகுல மக்களாகிய நாம் மீனவர்களாக இருப்பதால் எமது தொழிலிலும் பொருளாதாரத்திலும் விருத்திகாண்பதற்காககிளிநொச்சி, முல்லைத்தீவு முதலிய பகுதிகளுக்கும் கடற்றொழில் செய்வதற்காகப் போகவேண்டி யிருக்கிறது. ஆனால் இப்பிரதேசங்களில் யாழ்ப்பாணத்து மக்களுக்குச் சலுகைகள் வழங்கப்படுவதில்லை. இந்த விஷயத்தில் வவுனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் எமக்கு ஒத்துழைப்பு நல்கவேண்டும். கடல்கடந்த தமிழர்களுக்கும் நமக்குமிடையே பாலமாக விளங்கும் திரு. எஸ். தொண்டமானை வரவேற்பதில் பெருமையடைகிறோம்''.

உடுப்பிட்டி எம். பி, திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில் குறிப்பிட்டதாவது;—

''கரவெட்டிப்பகுதி குருகுல மக்களின் பிரச்சினைகளைத்தீர்த்துவைப்பதில் நான் முயற்சி எடுப்பேன். நல்ல குடிதண்ணீர் இன்றி நமது இளம்பெண்கள் இடுப்பொடியத் தண்ணீர்க் குடத்தைச் சுமந்து அதிகதூரம் நடக்கும் காட்சியை நம்மால் சகிக்க முடியவில்லை. அத்துளுதண்ணீர்த் திட்டத்தை விரைவில் அமுல் நடத்தலாமென்றால் சிலர் அதற்கும் தடையாகவிருக்கிறார்கள். எப்படியும் இந்தஆண்டுமுடிவதற்குள் இத்தண்ணீர்த் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்துவிடுவேன் என்றே நம்புகிறேன். திரு. தொண்டமான் கூறியது போல இன்று தமிழ்மக்களின்சார்பில் தேசிய அரசாங்கத்துடன் இணைந்துள்ள மூன்று கட்சிகளும் ஒன்றுபட வேண்டும். அப்போதுதான் தமிழினம் பலமடையும்.

மலைநாட்டுத் தமிழர்களுக்கும் யாழ்ப்பாணத் தமிழர்களுக்கும், வவனியாத் தமிழர்களுக்கும் ஒற்றுமை இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டவே திருவாளர்கள் எஸ். தொண்டமான், தா. சிவசிதம்பரம் ஆகிய பிரதிநிதிகளை இவ்வரவேற்பில் கலந்துகொள்ளும்படி அழைத்திருந்தேன். அவர்களும் வந்து நமது ஒற்றுமையை நிரூபித்துவிட்டார்கள். தேசிய அரசாங்கத்துடன் சேர்ந்து கொண்டால் மாத்திரம் போதாது. தமிழ் மக்கள் ஒற்றுமைப்படவேண்டும். இந்த நிலைமையில் தமிழ் மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.''

வவ்னியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் பேசுகையில், அகில இலங்கையிலும் சிங்கநாதம் முழங்கும் திரு. மு. சிவசிதம்பரத்தைப் பெற்றெடுத்த உடுப்பிட்டித் தொகுதி பெருமைக்குரியது என்றார்.''

திருவாளர்கள் எஸ். சிறீதரன், ஆசிரியர் திரு. கந்தப்பு, ஆகியோருட்படப் பலர் பேசினர்.

ஆரம்பத்தில் திருவாளர்கள் எஸ். தொண்டமான், மு. சிவசிதம்பரம், தா. சிவசிதம்பரம் ஆகிய எம்.பி.க்கள் டிராக்டரில் அலங்கரிக்கப்பட்ட மயில்வாகனத்தில் கரவை தச்சன்தோப்பு விநாயகர் ஆலயத்திலிருந்து வாத்திய இசைகள், சதுர்க்கச்சேரிகள், வாணவேடிக்கைகள் சகிதம் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

# லாகூரில் உக்கிரமான போர்:......

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

## ஜம்முவில் 4 பாக். விமானங்கள் அழிக்கப்பட்டன

ஜம்முமீது நேற்று இரவு வளையமிட்ட நான்கு பாகிஸ்தானிய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவுக்கு அதிக சேதம்

இந்திய-பாகிஸ்தான் சண்டையில் இந்தியாவுக்கு அதிக சேதம் ஏற்பட்டிருப்பதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

## 36 டாங்கிகள் சேதம்

லாகூரில் இந்தியப் படைகளுக்கு அதிக சேதம் ஏற்பட்டு வருவதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது, சியால் கோட்டில் நடைபெற்றுவரும் இந்திய-பாகிஸ்தான் சண்டையில் இந்தியத் துருப்புகளை பாகிஸ்தான் படைகள் நேற்று விரட்டியடித்துவிட்டன என்றும் 36 டாங்கிகளை பாகிஸ்தான் படைகள் விமானங்களின் உதவியுடன் அழித்துவிட்டன என்றும் பாகிஸ்தான் அறிவித்துள்ளது. லாகூரில் இந்திய முன்னேற்றத்தை பாகிஸ்தான்படைகள் தீவிரமாகத் தடுத்து வருகின்றன என்றும் முன்பிருந்த நிலைகளை விட்டுவிட்டு இந்தியப் படைகள் பின்வாங்கி விட்டன என்றும் பாகிஸ்தான் செய்திகள் கூறுகின்றன.

## ராஜஸ்தானில் பாக். முன்னேற்றம்

ராஜஸ்தானில் பாகிஸ்தான் படைகள் முன்னேறிக் கொண்டு வருகின்றன என்றும் இந்தியப் படைகளிடமிருந்த நிலையொன்றை பாகிஸ்தான் படைகள் கைப்பற்றியுள்ளன என்றும் பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

## ஸ்ரீநகரில் தாக்குதல்கள்

இதற்கிடையே ''காஷ்மீர் விடுதலைவீரர்கள்'' ஸ்ரீநகரை நோக்கி முன்னேறுகின்றன என்றும் ஸ்ரீநகரை நோக்கி முன்னேறிக் கொண்டுபோகும் அவர்கள் இந்தியப் படைகளுக்கு அதிக உயிர்ச்சேதத்தை ஏற்படுத்தி வருகின்றனர் என்றும் ''காஷ்மீர்குரல்'' என்ற வானொலி அறிவித்துள்ளது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பகுதி

விளையாட்டுத்துறையில்

## அபிவிருத்தி செய்வதற்கான மந்திரியின் திட்டங்கள்

திருகோணமலை, ஞாயிறு ''நவீன விளையாட்டு உபகரணங்களுடன் கூடிய விளையாட்டரங்கங்களை இலங்கை மிகப்பெரிய நகரங்களான யாழ்ப்பாணம், கண்டி, குருணகல, காலி, திருமலை முதலிய இடங்களில் நிறுவப்படவேண்டுமென்பதே எனதுவிருப்பமாகும்'' என்று விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. வி. ஏ. சுகததாஸ ஈழநாடு நிருபரிடம் தெரிவித்தார்.

'மற்ற இடங்களிலுள்ள விளையாட்டரங்கங்கள் கூட தேவையான சகல விளையாட்டுபகரணங்களைக் கொண்டுஇருக்க வேண்டும். கிராமப்புறங்களில் வாழும் திறமைபொருந்திய சகல விளையாட்டு வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் நல்ல பயிற்சியளிக்கவும் வேண்டும் என்று மேலும் கூறிய திரு. சுகததாஸா ''நீச்சல் தடாகம், திறந்த வெளிஅரங்குகள், உதைபந்தாட்ட, கரபந்தாட்ட மைதானங்கள் இல்லாதஸ்ரேடியங்கள் முழுமையானதாக இருக்கமுடியாது'' என்றார்.

விளையாட்டுத் துறையில் அபிவிருத்தி செய்யுமுகமாகத் தான் தயாரித்த திட்டங்களைச் செயல்படுத்த வெளிநாட்டு உதவியைப் பெறுவதுபற்றியும் தான் ஆலோசித்து வருவதாக திரு சுகததாஸா கூறினர்.

### தேசிய விளையாட்டு விழா
#### நடாத்துவதென மந்திரி முடிவு

திருக்கோணமலை, ஞாயிறு அகில இலங்கை ரீதியில் மாகாணத் தலைநகர்களான யாழ்ப்பாணம், மட்டுநகர், திருக்கோணமலை, கண்டி, காலி முதலிய இடங்களில் 1966-ம் ஆண்டு ஜனவரியில் இருந்து ஆகஸ்ட் மாதத்திற்குள்ள தேசிய விளையாட்டுக்கள் விழாக்களை நடத்துவதென விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. வி. ஏ. சுகததாஸா தீர்மானித்துள்ளார்.

மாகாண ரீதியில் நடத்தப்படும் இவ் விளையாட்டு விழாக்களில் திறமைகாட்டும் வீரர்களும் வீராங்கனைகளும் இறுதியில் கொழும்பில் நடைபெறும் மாபெரும் விளையாட்டு விழாவில் கலந்துகொள்வர்.

மாகாண ரீதியில் விளையாட்டு விழாக்களை நடாத்துவதன் மூலம் இலங்கையின் பல பாகங்களிலும் சிதறிக்கிடக்கும் சிறந்த விளையாட்டு வீரர்களை நாட்டிற்கு அறிமுகப் படுத்தலாமென திரு. சுகததாசா தெரிவித்துள்ளார்.

### மகாகும்பாபிஷேகம்

கோண்டாவில், ஞாயிறு கொக்குவில்-மணியர்காடு ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோவில் வள்ளிதேவசேனை சமேத ஸ்ரீ முத்துக்குமார சுவாமி மகாகும்பாபிஷேகம் இன்று நடைபெறும். இரவு திருக்கல்யாணம், திருஊஞ்சல், யாழ்ப்பாணம் திவ்யஜீவன சங்கத்தாரின் பஜனை ஆகியன நடைபெறும்.

REGAL--JAFFNA
NOW SHOWING!
Norman wisdom
IN
GIRL ON THE BOAT

இப்பொழுது திரையிடப்படுகிறது !

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ண (திருமலை) விஜிதா (ஹட்டன்)
மொடேர்ன் (பண்டாரவளை) தீவொளி (நுவரெலியா) லக்ஷ்மி (இரத்தினபுரி)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 2, 6, 9-30
சனி, ஞாயிறு 4 காட்சிகள்

சிவாஜிகணேசன், சாவித்திரி
எஸ். எஸ் ராஜேந்திரன்
கே. ஆர். விஜயா
நடிக்கும்
கைகொடுத்த தெய்வம்

# வானொலி

## கொழும்பு
### திங்கள் 13 9-65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

344 மீற்றர் & 61 மீற்றர்
காலை 6-45 உதயகீதம், 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-30 தேர்ந்தஇசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்
பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்
மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 பாட்டு.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 7-15 பாட்டு — நாகபூஷணம் ரத்தினம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 எங்கள் விருப்பம், 9-30 செய்திக்கடிதம், 9-45 நேயர்விருப்பம், 10-15 எங்கள்விருப்பம்.

## திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, மாலை 6-05 இரவு 7-15)

319.1 மீ (940 கி. ஸை.)
காலை 6-30 மங்களஇசை, 6-50 வாத்தியஇசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப்பாடல்கள், 7-30 பாட்டு — டி. எஸ். குழந்தைவேலு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 பாட்டு — டி. எஸ். குழந்தைவேலு, 1-30 வாத்தியஇசை, 1-50 மெல்லிசை, 2-40 பொன்னுளிர் பாரதம்—தொடர் நிகழ்ச்சி.

மாலை 5-00 கோட்டுவாத்தியம், 5-30 திரைப்பட இசை.

இரவு 6-20 இசைப் பயிற்சி, 6-35 மெல்லிசை, 6-40 பொதுநோக்கு, 6-45 சக்தி பிறக்குது — சித்திரம், 7-00 மெல்லிசை, 7-30 நம் விவசாயிகளுக்கு, 8-00 தாளவாத்தியக்கச்சேரி, 8-15 பலகனி, 8-30 பாட்டு — மதுரை வி. ஏ. மீனுக்ஷி, 9-15 ''காதல் காட்சிகள்'' (இராமாயணத்தில்) — பூ. அமிர்தலிங்கம், 9-30 இசைக்கோவை, 9-45 ராகம், தானம், பல்லவி.

## ஜயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுமென்று ஏற்பாடு செய்திருந்தனர். ஆனுல் நன்றிகூறியவர் சுமார் முக்கால்மணிநேரம் எடுத்து, நீண்ட பிரசங்கம் செய்துவிட்டார். நன்றிகூறிமுடிந்ததும், கவர்னர்ஜெனரல் கோபல்லவா எழுந்து, இவ்வளவுநேரம் பலருக்கும் நன்றிகூறியவருக்கு, எல்லாருடைய சார்பாகவும் தாம் நன்றிகூறுவதாகச் சொன்னதும், மண்டபத்திலிருந்த அனைவரும் சிரித்து கரகோஷம் செய்தனர். பாவம்! விஜயதிலகாவுக்குத் தன் தவறு புரிந்ததோ இல்லையோ!

∴ ∴ ∴

இக்கூட்டத்திலே ஸ்ரீமதி ஆனந்தகுமாரசுவாமி, தம் புருஷனின் அஸ்தியை ஞாபகார்த்த சபையிடம் ஒப்புவிப்பார் என்று அறிவித்திருந்தனர். அப்படி ஒன்றும் செய்யவில்லை, விசாரித்ததில், அஸ்தியை பகிரங்கமாகக் கொடுப்பது அவ்வளவு சரியாக இராதென்று கருதி, [illegible]

தாக அறிந்தேன்.

ஸ்ரீமதி ஆனந்தகுமாரசுவாமி கோடிட்ட ஸில்க் புடவை அணிந்து, கச்சிதமாகப்பேசி, எல்லாருடைய மெருமதிப்பையும்நன்றியையும் பெற்ருர்.

அவர் உடன் அமெரிக்காவிலுள்ள போஸ்டனுக்குத் திரும்பி பின்னர் சிலமாதங்களில் இலங்கைவர இருப்பதாக அறிந்தேன்.

டாக்டர் ஆனந்தகுமாரசுவாமியின் பெயரை மானிப்பாயிலே ஒரு தெருவுக்கு வைப்பதென்றுஒருயோசனை வெளியாயிற்றல்லவா? இதைப்படித்த ஒரு சிங்கள அன்பர், இலங்கைக்காக அரும்பெரும் சேவைசெய்தவரும், 500 நூல்களுக்கு மேல் எழுதியவருமான, டாக்டர் குமாரசுவாமியின் பெயரை, கொழும்பு மியூஸியம் உள்ள தெருவுக்கு வைக்கவேண்டுமென்று பத்திரிகைகளில் எழுதியுள்ளார் தலைநகரமான கொழும்பில் அப்பெரியாருக்குத் தக்க ஞாபகச்சின்னத்தை ஏற்படுத்த ஏதாவது அக்கூட்டத்தில் தீர்மானிப்பரென்று எதிர்பார்த்தேன், ஒன்றுமில்லை. வெறும் பேச்சுடன் இது முடிந்துவிடாமல் அப்பெரியாரின் ஞாபகமாக தக்க சின்னத்தை தலைநகரில் ஏற்படுத்த இனி முயற்சிப்பரென்றே நம்புவோம்.

ஃ ஃ ஃ

அரியானை யந்தணர்தஞ் சிந்தையானை யருமறையின கத்தானைய ணுவையார்க்குந் தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத் திகளொளியைத் தேவர் கடங்கோனை மற்றைக் கரியானை நான்முகனைக் கனலைக்காற்றைக் கனகடலைக் குலவரையைக் கலந்து நின்ற, பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

— திருநாவுக்கரசுநாயனர்

# வரி விளம்பரம்

### நினைவு தினம்

காலம்சென்ற அமராவதிப்பிள்ளை அவர்களின் வீட்டுக்கிரித்திய நினைவு தினம்.

இவர் புங்குடுதீவு கிழக்கு வேளாண்குடி ஐயம்பிள்ளையின் பத்தினியாரும், ஐ. நவரத்தினம், ஐ. பேரின்பநாதன் அவர்களின் நற்ருயும், சரஸ்வதியின் மாமியும், கேதீஸ்வரியின் பேர்த்தியும், பொன்னம்மா, கார்த்திகேசு, தங்கம்மா, சின்னத்துரை முதலியோரின் சகோதரியுமாவார். ஆகவே அம்மையாரின் வீட்டுக்கிரித்தியம் (16-9-65) வியாழக்கிழமை அவருடைய இல்லத்தில் நடைபெறும். எனவே உறவினர்கள் நண்பர்கள் இவ் அழைப்பிதழை ஏற்று சமுகம் தருமாறு அன்புடன் வேண்டிக்கொள்ளுகிறேன். தகவல் கொடுப்பவர்: நா. ஐயம்பிள்ளை, 12-ம் வட்டாரம். புங்குடுதீவு கிழக்கு. 1013

### முதலாவது சிரார்த்ததினம்

வவுனியா, ஞாயிறு காலம்சென்றபிரபல வர்த்தகர் திரு. அ. சிவபாதசுந்தரத்தின்முதலாவது சிரார்த்த தினம் நேற்று முன்தினம் இங்கு கோயில்களில் நடைபெற்ற விசேஷ பூசைகளுடன் சிறப்பாக அனுசரிக்கப்பட்டது. அன்னரின் தினத்தையொட்டி வவுனியா கந்தசுவாமி கோயிலில் விசேஷ பூசைகளையும் ஆராதனைகளையும் திரு. மு.காசிப்பிள்ளை நடத்திவைத்தார்.

### கல்வி

எங்கள் ஜி. சி. இ. சாதாரணம் கலை/ விஞ்ஞானம்/ வர்த்தக வகுப்புகளில் சில இடங்களே காலியாக உள்ளது. தாமதிக்காமல் சேருங்கள். யுனைட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி/ 107, பருத்தித்துறை, வீதி நல்லூர், யாழ்ப்பாணம். 967

ஜி. சி. இ. உயர்தரம், கலை, விஞ்ஞான வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. யுனைட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 968

பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஜி. ஏ. கியு. பரீட்சையில் தோற்றலாம். தற்பொழுது நடத்தப்படும் வகுப்புகளில் தாமதியாமல் சேரவும். யுனைட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை ரோட், நல்லூர், யாழ்ப்பாணம். 969

பி. ஏ. வகுப்புகள் சில நாட்களுக்குள் ஆரம்பமாகும். உடன் சேருதல் நன்மை பயக்கும். யுனைட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி. / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 970

இலண்டன் சேம்பர் ஓவ் கொம்மர்ஸ், இன்ஸ்ரிரியூற் ஒவ் புக் கீப்பர்ஸ், போஸ்ட் மாஸ்ரர்ஸ் அன்ட் சிக்னலர்ஸ் பரீட்சைகளுக்குரிய வகுப்புகளுக்கு தற்பொழுது விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. யுனைட்டெட்இன்ஸ்ரிரியூற்ஸ் நெல்லியடி, கரவெட்டி/107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 971

ஆங்கிலம்/தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து, கணக்கியல், வர்த்தக வகுப்புகள் தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. தங்கும் வசதி உண்டு. யுனைட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி/107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 972

பாலர் கீழ்ப்பிரிவு தொடக்கம் எஸ். எஸ். சி. வரைசிங்கள வகுப்புகள் தராதரம் உடைய ஆசிரியரால் நடத்தப்படுகின்றது. உடன் சேருதல் நன்மை அளிக்கும். யுனைட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி/ 107, பருத்தித்துறைவீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 973

## அரிசியில் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் இப்படியாக பச்சையரிசியுடன் ரேஸ் பவுடரைக் கலந்து உள்ளூர் பச்சையரிசி என்று விற்பனவு செய்தபோது பிடிபட்டதாகவும், தண்ணீரில் அரிசியைக் கரைத்துப் பார்த்தபோது தண்ணீர் ரேஸ் கலராகியதாகவும் பச்சையரிசியில் ரேஸ் பவுடர் கலரைச் சேர்த்திருப்பது அறியவந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பச்சையரிசியுடன் கலக்கப்பட்டுள்ள ரேஸ்கலர் நச்சுத்தன்மையுடையதாக இருக்குமோவெனச் சந்தேகிக்கப்படுகிறது.

பொதுமக்கள் இவ்விஷயத்தில் மிகவும் எச்சரிக்கையாகவிருந்து மோசடி செய்யும் வர்த்தகர்களைப் பிடித்துத்தர தமக்கு உதவியாக இருக்கவேண்டுமென்று உணவுக் கட்டுப்பாட்டுப் பகுதி கேட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நெருக்கடியான நிலைமை திணிக்கப்பட்டுள்ளது'

## இந்திய ஜனதிபதி

புதுடில்லி, செப். 11

'மிக மிக நெருக்கடியான தொரு நிலைமை நம்மீது திணிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான் நமது நகரங்களைத்தாக்க முற்பட்டுள்ளது. பாகிஸ்தான் ஜனதிபதி போர் நிலையே தோன்றியுள்ளதாக அறிவித்தல் செய்துள்ளார். ஆனல்நாம் போர் மூண்டுவிட்டதாகக் கருதவில்லை' இந்திய ஜனதிபதி டாக்டர் ராதா கிருஷ்ணன் இன்றிரவு விடுத்த வானொலிச் செய்தியொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தமது செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாம் நமது நிலப்பரப்பைப் பாதுகாக்கும் முயற்சியிலேயே ஈடுபட்டுள்ளோம். பூசலை விரிவுபடுத்துவது நமது ஆசையல்ல.

இந்தச் சந்தர்ப்பத்தில் பாரத நாட்டுமக்கள் அனைவரும் சகலவேற்றுமைகளையும் மறந்துஒற்றுமைப்பட்டு நமது சுதந்திரத்தையும் லட்சியத்தையும் காப்பாற்றத் தயாராகவேண்டும். 6 கோடி முஸ்லிம்கள் நம்நாட்டில் கௌரமாக சம பங்கு கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். சுதந்திர தீபம் அணைந்து போகாமலிருப்பதற்காக நாம் வெற்றி பெற்றே தீரவேண்டியுள்ளது. சமாதானத்தில் நாம் நம்பிக்கை இழந்துவிடவில்லை. நம்மைப் பிரிக்கும் சக்திகளைவிட ஒற்றுமைப் படுத்தும் சக்திகளே அதிகமாயிருக்கிறது.

டாக்டர் ராதா கிருஷ்ணன் தமது உரையில் முப்படையைச் சேர்ந்த வீரர்களுக்கும் பாராட்டுத் தெரிவித்தார்.

# சைவத்தை வளர்த்தால் தமிழ் மொழி வளரும்

## இந்துக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பேராசிரியர்

யாழ்ப்பாணம், சனி

தமிழ்மொழி சைவத்தில் ஊறிக்கிடக்கிறது. சைவத்தைவளர்ப்பதன் மூலமே தமிழையும் வளர்க்கலாம்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பரிசளிப்புவிழாவின் போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பேராசிரியர் ஏ. டபிள்யூ. மயில்வாகனம் மேற்கண்டவாறுகூறினர்.

இந்துக்கல்லூரி அதிபர் திரு. எஸ். சபாரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பேராசிரியர் மயில்வாகனம் மேலும் கூறியதாவது, சைவசமயத்தைப் பற்றிப் பேசும்போது பெருமைப்படவேண்டும். முன்னேரின் கூர்ந்த புத்தியைப் போற்றவேண்டும். சிலர் சைவசமயத்தை பொதுமக்களை மயக்கும் அபின் என்கின்றனர். வேறு மதங்களைப் போற்றுபவன் நான், வேறு மதங்களைப் பின்பற்றும் ஒரு சிலர் சைவத்தைச் சாப்பிட முயல்கிருர்கள். திருக்கேதீஸ்வரத்தில், கந்தையா வைத்தியநாதனுக்குநேர்ந்த கதியை அறிவீர்கள்.

### உள்வீட்டுப்பகை

அரசியல் பத்திரிகையொன்று, சிவன்பார்வதியைப்பற்றி அவதூருன செய்திவெளியிட்டது. நான் அக்கட்சித் தலைவரிடம் இதைப்பற்றி கூறியதும் அவர் மனம் வருந்தினர், முகமது நபியைப் பற்றியோ வேறு மதத்தைப் பற்றியோ பத்திரிகை அவதூருக எழுதியிருந்தால், அச்சுக்கூடம் அழிக்கப்பட்டிருக்கும்; ஆசிரியர் பொசுக்கப்பட்டிருப்பார். சைவசமயம் உள்வீட்டுப் பகையினுல் பலகஷ்டங்கள் அடைந்துவருகிறது. இளம் விஞ்ஞானிகள் அற்ப அளவில் விஞ்ஞானம் பயின்று சைவசமயம் மூடநம்பிக்கையானது என்கின்றனர். இவற்றை எதிர்த்து பல தடவை கருத்தைக் கூறியுள்ளேன்.

தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக நான் எடுத்து வந்த முயற்சிகளை சிலர் முறியடித்து வந்தார்கள். இதனல் என் முயற்சிகள் பல வெற்றியளிக்கவில்லை.

தாய்மொழிமூலம் விஞ்ஞானம் போதிக்கும் உரிமையை நான் தனிமனிதனுக நின்று பெற்றுக் கொடுத்திருக்கிறேன் என்பதைப் பெருமையுடன் கூறுகிறேன்.

சைவத்தை இழந்தால், இனத்தையும்மொழியையும் இழந்துவிடுவோம். அரசியல் வாதிகளை நம்பி ஏமாறக் கூடாது. சைவத்தை வளர்ப்பதனுல்தான் தமிழைவளர்க்கலாம்.

கல்லூரி அதிபர் திரு.என். சபாரத்தினம் பேசுகையில், விஞ்ஞானம் என்பது நமது நாளாந்த வாழ்வோடு ஒன்ருக இணைந்துள்ள இக்காலத்திலே, வாழ்வுக்கலைகள் என்றும், விஞ்ஞானம் என்றும் கல்விமுறையில் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத இரு வேறு பிரிவு செய்வது அறிவுடமையாகாது. அதனுல் வாழ்வு பயனற்றுப்போது ஒரு புறமிருக்கவாழ்க்கையில்விரக்தி ஏற்படவும் காரணமாகிறது என்றும் எனவே கல்விமுறையில் இப்பொழுது மாற்று அமைப்பு ஒன்றை அவசியம் செய்துகொள்ள வேண்டிய நிலையில் இருக்கிருேம் என்றும் கூறினர்,

இவ்விழாவில் நல்லூர் எம். பி. டாக்டர் ஈ.எம்.வி. நாகநாதனும் கலந்துகொண்டார். செல்வன் வே. சுகுமார் வரவேற்புரை நிகழ்த்தினர். திருமதி வி. ஆறுமுகம் பரிசில்களை வழங்கினர். டாக்டர் பி. சிவசோதி நன்றியுரை கூறினர்.

S.R.S.
ஜவுளி மாளிகை
திருமண
வைபவங்களுக்கு
தேவையான
பட்டு சேலைகளும்
வேட்டி
சால்வைகளும்
மலிவான விலைகளில்
பெற்றுக்கொள்ளலாம்!
எஸ். ஆர். செல்லத்துரை,
216, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.
போன்: 296

## தமிழ் சாகித்திய.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திய மண்டலப் பரிசுகிடைக்கும் என்ற எண்ணத்தை புலவர் சின்னையாவின் கதிரமலைக் கோவை இல்லாமல் செய்துவிட்டதென்றுசொன்ஞர்.

திரு. எஸ். யூ. சோமசேகரம் திரு. சோ. நடராசனைப் பாராட்டிப் பேசுகையில், நவாலியூர் நடராசன் புலவர் பரம்பரையில் வந்தவரென்றும், அவர் மொழிபெயர்ப்புத் துறைக்குச் செய்துவரும் சேவை மகத்தானதென்றும் கூறினர்.

புலவர் சின்னையா, நவாலியூர் நடராசன் ஆகியோர் பாராட்டுக்களுக்கு நன்றி தெரிவித்தனர். பண்டிதர் வி, சி கந்தையா சுகவீனம் காரணமாக விழாவுக்குச் சமூகமளிக்கவில்லை.

விழாவின் இறுதி நிகழ்ச்சிகளாக விரிவுரைகள் இடம்பெற்றன.

### காவிய அமைப்பு

வியாகரண சிரோமணி தி. க. சீதாராம சாஸ்திரிகள் 'காவிய அமைப்பு' என்னும் பொருள்பற்றி உரைநிகழ்த்துகையில் கூறியதாவது:-

''காவியங்களை படைக்கும்போது அவைகளுக்கு உயிர் கொடுக்கக்கூடியதாக இருப்பவை உவமைகள். உவமைகள் இல்லாத காவியங்கள் உயிரற்ற இலக்கியம். வால்மீகி, கம்பர் படைத்த காவியங்களில் இந்த உவமைகளை அதிகப்படியாகக் காணக்கூடியதாகவிருக்கிறது.

அடுத்து காவியங்களில் நவரசங்களில் ஒன்ருவது இடம்பெற வேண்டும். இல்லாவிட்டால் அந்தக் காவியம் சப்பற்ற காவியமாகிவிடும்.

### மக்கள் இலக்கியம்

பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் 'மக்கள் இலக்கியம்' என்னும் பொருள் பற்றிப் பேசுகையில் கூறியதாவது:-

''சங்ககால இலக்கியங்களை 'மக்கள் இலக்கியங்கள் என்று சொல்லலாம். அவை அழியாத இலக்கியங்களாக இருப்பதற்குக் காரணம் தெய்வீகத்தை அடிப்படையாக வைத்துப் படைக்கப்பட்டிருப்பதானுல் தான்''

### இலக்கியமும் சமுதாயமும்

புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை ''இலக்கியமும் சமுதாயமும்'' என்னும் பொருள்பற்றிப் பேசுகையில் கூறியதாவது:-

''இலக்கியம் சமுதாயத்தைத் திருத்துவதற்காகவே படைக்கப்பட வேண்டும். சமுதாயத்தை திருத்த முடியாத வெறும் ''சப்பற்ற'' இலக்கியங்களைப் படைப்பதால் எதுவிதமான அர்த்தமும் கிடையாது. அப்படியான இலக்கியங்களைப் படைப்பவர்கள் அத்தொழிலையே விட்டுவிட வேண்டும். நமது நாட்டில் சமுதாயத்தைத் திருத்தக்கூடிய நல்ல இலக்கியங்கள் படைக்கப்படவேண்டும்''

பண்டிதர் த. கிருஷ்ண பிள்ளை நன்றிகூறினர்.

# வன்னியசிங்கம் நினைவு விழா

கோண்டாவில், ஞாயிறு

வன்னியசிங்கம் நினைவு விழா இம்மாதம் 19-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை கோண்டாவில் அரசினர் சைவத் தமிழ் வித்தியா சாலையில் நடைபெறும். இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக ... அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் கலந்துகொள்வார்.

# "சாதிபேதத்தை ஒழிக்க உதவிசெய்த அரசாங்கம்"

## பண்டாரநாயக்கா அரசாங்கத்துக்கு பருத்தித்துறை எம். பி. பாராட்டு

யாழ்ப்பாணம், திங்.

''மொழிப் பிரச்னையைப் பொறுத்த வரையில் பண்டாரநாயக்கா அரசாங்கம் தமிழ் பேசும் மக்களுக்குத் தீங்கிழைத்த போதிலும் சமூகத்திலேயுள்ள உயர்வு தாழ்வுகளை, சாதிப்பாகுபாடுகளை ஒழிப்பதற்காக அந்த அரசாங்கம் நல்ல முறையில் செயலாற்றி இருக்கிறதென்பதை யாராலும் மறுக்க முடியாது. 1956-ம் ஆண்டு சமூக குறைபாடு ஒழிப்புச் சட்டத்தை கொண்டுவந்து சாதி ஒழிப்புக்கு முதல் வித்திட்டதும் பண்டாரநாயக்கா அரசாங்கம் தான்.''

யாழ்ப்பாணம் சேணியார் தெரு அரசினர் பாடசாலையில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற காலஞ்சென்ற ஆசிரியர் பசுபதி (யாழ்ப்பாணக் கவிராயர்) யின் 'புது உலகம்' வெளியீட்டு விழாவில் நூலை வெளியிட்டு வைத்து பருத்தித்துறை எம்.பி. திரு க. துரைரத்தினம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகத்தின்வெளியீடான இந்நூல் வெளியீட்டு விழாவுக்கு புலவர் பார்வதி நாதசிவம் தலைமை தாங்கினர். சைவப்புலவர் திரு எஸ். வல்லிபுரம் புத்தக விமர்சனம் செய்தார்.

திரு. துரைரத்தினம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

''சாதிப்பாகுபாடுகள் இந்நாட்டிலிருந்து அறவே ஒழியவேண்டுமென்ற கொள்கையுடையவன் நான். அதனை முன்வைத்து பல இயக்கங்களில் கலந்து கொண்ட போது தான் கவிஞர் பசுபதியின் தொடர்பு கிடைத்தது. என்னைவிட அவர் மேற்படி விஷயத்தில் மிக மிக அக்கறையுள்ளவராகப் பணியாற்றினர் என்பதை அவருடன் பழகியதிலிருந்து தெரிந்து கொண்டேன். அவர் ஓர் இலட்சிய மனிதரென்றே சொல்ல வேண்டும்.''

திரு கா.சிவத்தம்பி தமது சிறப்புரையில் குறிப்பிட்டதாவது;-

''தேசியக் கவிஞர் பாரதியின் வரிசையில் வைக்கப்படவேண்டியவர் கவிஞர் பசுபதி. ஒரு நாட்டின்விடுதலைக்காகப் பாடினர். பாரதி. அதேமாதிரி ஒதுக்கப்பட்ட ஒரு இனத்தின் விடுதலையைக் காணத்துடித்தார் பசுபதி.

கொள்கைக்காகவும் லட்சியத்துக்காகவுமே தன்னை அர்ப்பணித்துக் கொண்ட பசுபதி தன் லட்சியப்பாதையிலே ஓரளவு திருப்தி கண்டுதான் மரணப் பாதையில் காலடி எடுத்து வைத்தார் என்றே சொல்லலாம். அவருடைய ஒவ்வொரு கவிதைகளிலும் அவர் இதயக் குமுறல் வெளிக்காட்டப்படுகிறது. அவர் மறைந்தாலும் அவருடைய லட்சியக் கவிதைகள் வாழ்ந்துகொண்டேயிருக்கும்.''

நாவலாசிரியர் சுப. இளங்கீரன் பேசுகையில் கூறியதாவது:-

''தன்னுடைய செயல்களுக்காக இந்த உலகம் புகழ்மாலைசூட்டவேண்டும் என்ற எண்ணத்துடன் பசுபதி வாழவில்லை. சாதாரண மானவர்களுக்குப் புலப்படாத லட்சியத்துக்காகவும், கொள்கைகளுக்காகவும் வாழ்ந்தார். தான் சென்ற நீண்டபாதையில் ஓரளவு வெற்றிகண்டதிருப்தியுடன் மாண்டார். அவருடைய வாழ்க்கையில் தனக்காக, தனது குடும்பத்துக்காக அவர் செய்தது ஒன்றும் கிடையாது. இந்நாட்டில் வாழும் ஒரு பிரிவு மக்களுக்காக தன்னையே அர்ப்பணித்து வாழ்ந்தார். அவர் சேவையை யாராலும், என்றும் மறக்கமுடியாது.''

மற்றும் திரு. செ. யோகநாதன், கவிஞர் மு. செல்லையா, திரு. எம். சி. சுப்பிரமணியம் திருமதி வள்ளியம்மை சுப்பிரமணியம் உட்பட வேறுபலரும் பேசினர் திரு. ஜீவா வரவேற்புரை நிகழ்த்தினர்,

# பண்டத்தரிப்பு கி. ச. புதிய தலைவர்

சுழிபுரம், ஞாயிறு

பண்டத்தரிப்பு கிராம சபைத் தலைவர் பதவிக்கு பண்டிதர் இ. இராமலிங்கம் தெரிவு செய்யப்பட்டார். கனவான் ஒப்பந்தத்துக்கிணங்க திருமதி பேர்ளி அத்தனசியார் தலைவர் பதவியை ராஜினமாச் செய்ததால் இத்தெரிவு நடைபெற்றது,

# பயனுள்ள பேச்சுவார்த்தை

பம்பாய், செப். 12

இன்று பம்பாய் வந்து சேர்ந்த ஐ. நா. தலைமைக்காரியரிசி யுதாண்டைப் பத்திரிகைநிருபர்கள் பேட்டி கண்ட போது தாம் பாகிஸ்தான் ஜனபதி அயூப்கானுடன் பயனுள்ளபேச்சுவார்த்தை நடத்தியதாகவும் அதன் சாரத்தை தற்போது விபரமாகத் தெரிவிக்க இயலாது என்றும் கூறினர். தாம் திரு. சாஸ்திரியுடன் பேச்சுக்கள் நடத்திய பின் ராவல்பிண்டிக்குச் செல்லக்கூடும் என்றும் அவர் தெரிவித்தார்.

# 'சமத்துவ வழியே சர்வோதயநெறி'

கொழும்பு, சனி

பெரும்பான்மையினர் மட்டும் மகிழ்ச்சியுடன்வாழ்வது சர்வோதயநெறியல்ல. சகல மக்களும் எல்லா உரிமைகளும் வசதிகளும் பெற்று மகிழ்வுடன் வாழ்வதுவே சர்வோதய நெறியின் அடிப்படையாகும்.'

கொழும்பு தேஸ்டன் கல்லூரியில் இன்றுநடைபெற்ற விநோபா ஜெயந்தி விழாவில் உரைநிகழ்த்திய இந்திய ஹைகமிஷனர் திரு. பீம்சன் சச்சார் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

அணு சக்தியாலும் யுத்தங்களாலும் வேறுபாடுகள் மலிந்த நிலையிலுள்ள செல்வங்கொழிக்கும் நாடுகளில் வசிக்கும் மக்களின் வாழ்க்கையில் வெறுமைத் தன்மையையே நாம் காணமுடிகிறது. உலகெங்கும் பல ஆயிரம் வருடங்களாக நிலைநிற்கக்கூடியது காந்திகாட்டிச்சென்ற அன்பு நெறியே யாகும்.

சர்வோதயம் சமத்துவ நிலையை ஏற்படுத்தி சகல இனமக்களுய ஒருமித்துவாழ வழிவகுக்கும். சகல இனமக்களும் ஒருமித்து வாழும் இலங்கை உலக மக்களுக்கு இதில் வழிகாட்டவேண்டும்.

யாபாரம் பெருக
ளம்பரம் செய்க

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு செப்டம்பர் மாத 13-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org